# ECHO OF HIS CALL

# அழைப்பின் எதிரொலி

Tamil

₹ 10/-

India's National Spiritual Newspaper

ECHO OF HIS CALL 1969-2019 GOLDEN JUBILEE

REACHING NATIONS

Published monthly in ENGLISH, TAMIL, MALAYALAM, TELUGU, HINDI, KANNADA, MARATHI, BENGALI, GUJARATI, ODIYA, ASSAMESE, PUNJABI, NEPALI, URDU, SINHALA & AFRIKAN

Editor : S. SAM SELVA RAJ | 16 Languages | Senior Associate Editor: SIS. SERENA BEVIN

Vol. XXVIII | JANUARY 2023 | No. 01

## பரிசுத்த வேதாகமம்

இப்பகுதியை மனப்பாடம் செய்யவும்.

**மத்தேயு 5:11-18**

11. என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள் பேரில் பொய்யாய் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்;

12. சந்தோஷப்பட்டு, களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்; உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே.

13. நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்; உப்பானது சாரமற்றுப் போனால், எதினால் சாரமாக்கப்படும்? வெளியே கொட்டப்படுவதற்கும், மனுஷரால் மிதிக்கப்படுவதற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது.

14. நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்; மலையின்மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்க மாட்டாது.

15. விளக்கைக் கொளுத்தி மரக்காலால் மூடிவைக்காமல், விளக்குத் தண்டின் மேல் வைப்பார்கள்; அப்பொழுது அது வீட்டிலுள்ள யாவருக்கும் வெளிச்சம் கொடுக்கும்.

16. இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது.

17. நியாயப்பிரமாணத்தையானாலும் தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக் கொள்ளாதேயுங்கள்; அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன்.

18. வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும், நியாயப்பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும், அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்து போகாது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

# ஆசீர்வாதமான புதிய வருடம் . . . 2023

Dr. A. ரிச்சர்ட் சாமுவேல்

**"சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும், மற்ற எந்தத் துர்க்குணமும் உங்களை விட்டு நீங்கக்கடவது. ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்."** எபேசியர் 4:31,32.

ஒரு புதிய வருடத்திற்குள்ளாய்ப் பிரவேசிக்கும்போதெல்லாம் புது வருட தீர்மானங்களை நாம் எடுப்பது வழக்கம். வருட முடிவில், நாம் எந்த தீர்மானங்களை எடுத்தோம் என்பதையே மறந்து விடுகிறோம். அவற்றில் எதை நிறைவேற்றினோம் என்று கூட சிந்திக்காத நமது நிலைமை கவலையளிப்பதாகவே உள்ளது. "புதிய வருட தீர்மானங்கள் நிறைவேற்றப்படாமல் இருப்பதற்காகவே எடுக்கப்படுகிறது" என்று ஒருவர் நகைச்சுவையாகக் கூறினார்.

புது வருட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட நாம் இணைந்து ஒரு குழுவாகச் செயல்பட வேண்டும். இயேசுவால் பயிற்றுவிக்கப்பட்ட சீஷர்கள், அவர் சிலுவையில் அறையப்பட்டதுமே இயேசுவை விட்டு ஓடிப் போனார்கள். இயேசு உயிர்த்தெழுந்த பின்பு, கலிலேயோவிலுள்ள ஒரு மலையில் எல்லா சீஷர்களும் சேர வேண்டும் என்று கட்டளையிட்டிருந்தார் (மத்தேயு 28:16). அதற்கு அவர்கள் கீழ்ப்படிந்தார்கள். ஆனால் அதன்பின் தங்கள் சொந்த வேலைக்கு ஒவ்வொருவரும் திரும்பிப் போய்விட்டனர்; மீன்பிடிக்கச் சென்று விட்டனர் (யோவான் 21:1–4). பெந்தெகொஸ்தே என்ற நாளில், மேல் வீட்டறையிலே பரிசுத்த ஆவியானவராகிய தேவன் சீஷர்களைச் சந்தித்தார் என்று அப்போஸ்தலர் 2ம் அதிகாரத்தில் பார்க்கிறோம். சீஷர்கள் பெலப்பட்டார்கள். அவர்களுக்குள்ளே ஒரு மாபெரும் மாற்றம் ஏற்பட்டது. சுவிசேஷத்தை தைரியமாகப் பிரசங்கிக்கும் பிரசங்கியார்களாக மாறினார்கள். புது வருட தீர்மானங்களைக் குறித்து நாம் சிந்திக்கும்பொழுது, தேவனது உதவி

தொடர்ச்சி 3-ம் பக்கம்.....

## அழைப்பின் எதிரொலி – யுடியூப் சானல்!

## போதகர் சாம் செல்வ ராஜ் அவர்களுடன் ஜெபியுங்கள்!!



நமது **அழைப்பின் எதிரொலி யுடியூப் சானலில்** திங்கள் முதல் சனி வரை ஒவ்வொரு நாளும் காலை 5 மணிக்கும், ஞாயிறுதோறும் காலை 8 மணிக்கும் **தமிழில்** நற்செய்திகள் ஒளிபரப்பாகின்றன. எங்களது செய்திகள் **ஆங்கிலம் மற்றும் இந்தியில்** திங்கள் முதல் சனி வரை ஒவ்வொரு நாளும் காலை 5.00 மணிக்கு ஒளிபரப்பாகின்றன. எங்களை ஜெபத்தில் தாங்கவும். உங்கள் கருத்துக்களை தெரியப்படுத்தவும். இதன் வழியாக ஒவ்வொரு நாளும் நீங்கள் தனிப்பட்ட முறையில் போதகர் சாம் செல்வ ராஜ் உடன் ஜெபிக்கலாம்.

– மேரி & கிறிஸ்டி சின்னையா, டைரக்டர்கள்

# ECHO OF HIS CALL - (1969-2019 GOLDEN JUBILEE YEAR)

REACHING NATIONS

## உங்கள் அன்பு சகோதரனிடமிருந்து...





**நிச்சயமாகவே முடிவு உண்டு; உன் நம்பிக்கை வீண் போகாது.**
நீதிமொழிகள் 18:23.

### OUR MISSION POLICY

We should expound and teach the contemporary generation the undiluted teachings of the ancient and early Apostles. It is the need of the hour.


CHIEF EDITOR
Angeline Selvakumari Henry, M.A., M.Ed.

MANAGING EDITOR
Pastor Alex Samson Sam, B.Th., M.Div.

ADMINISTRATION
Bro. N. Prakasam, M.A., General Manager

EDITORIAL BOARD
Sis. Jesy Veena Sam
Sis. Serena Bevin, M.A., M.Phil., B.Ed.
Dr. A. Richard Samuel, M.A., Ph.D.
Rev. Dr. K.R. Rajasekaran



EDITOR, PUBLISHER & PRINTER
Pastor S. SAM SELVA RAJ
Echo of His Call Printers
10, Mohammed Abdullah 2nd Street,
Chepauk, Chennai- 600 005, India.
Phone : (+ 91- 44) 2852 8282, 2852 9293, 2854 7766
Cell : (+91) 98410 71852, 95661 31858



CORE LEADERS
Bro. K. Puratchivendan
Bro. A. Edward Durai
Bro. A. Alvin
Bro. K. Abraham
Sis. Dhanalakshmi Chinnaiah



E.mail ID
sam@echoofhiscall.org
biblecor@yahoo.co.in

WEBSITES
www.echoofhiscall.org
www.stpaulsmatriculation.com

YOUTUBE CHANNEL
Echo of His Call


கர்த்தருக்குள் மிகவும் பிரியமானவர்களே!

நமது ஆண்டவரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு எங்கள் 2023–புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம். இம்மட்டும் நம்மை நடத்தி வந்த தேவாதி தேவனுக்கு மகிமை மேல் மகிமை உண்டாவதாக!

நீங்கள் எப்படியிருக்கிறீர்கள்? உங்களுக்காகவும், உங்கள் தேவைகளுக்காகவும் நாங்கள் பாரத்துடன் ஜெபித்து வருகிறோம். எங்களுடன் நேரடித் தொடர்பில் இருக்கிற சந்தாதாரப் பங்காளர்கள் (Subscribing Partners), ஜெபப் பங்காளர்கள் (Prayer Partners), விசுவாசப் பங்காளர்கள் (Faith Partners), ஆயுட் பங்காளர்கள் (Life Partners), பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் (Great Commission Partners) ஆகியோருக்காகத் தனித்தனி கோப்புகள் மற்றும் பதிவேடுகளைப் (Files and Registers) பராமரித்து, உங்களை நினைத்து, உங்கள் சூழ்நிலைகளுக்காகப் பாரத்துடன் ஜெபிப்பதை எங்கள் பொறுப்பாய் ஏற்று நடைமுறைப்படுத்தி வருகிறோம். இதற்கு என் தனி அறையில் உள்ள ஜெப இடமாகிய பென்சில் ஜெபப் பாய் (Pencil Prayer Mat) 24 மணிநேரமும் ஆயத்தமாகவே இருக்கிறது. இதனை அங்கீகரித்து தேவன் உங்களை ஆசீர்வதிப்பார். பயப்படாதிருங்கள். தேவன் நம்மோடு இருக்கிறார். உங்களைப் போன்ற தேவமக்களுடையக் கஷ்ட, நஷ்டங்களையெல்லாம் நாங்கள் நன்கு அறிவோம். எனவே, தைரியமாயிருங்கள். கர்த்தர் இவ்வாண்டில் உங்களுக்கும் பெரிய காரியங்களைச் செய்வார். **தேசமே, பயப்படாதே, மகிழ்ந்து களிகூரு; கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார்.** யோவேல் 2:21

எங்களுக்கு வரும் தகவல்களின்படி, வருங்காலங்களில் இந்தியாவில் உள்ள ஊழியங்கள் குறிப்பாக சுயாதீன திருச்சபைகளும், சுயாதீன ஊழியங்களும் செயல்படுவதில் மிகுந்த சிரமங்கள் ஏற்படலாம். எனவே, தேவ ஊழியர்கள் மிகவும் எச்சரிக்கையுடனும், கருத்துடனும் செயல்பட உடனே ஆயத்தமாகுங்கள்.

நீங்கள் தேவ ஊழியர்களாக அதிலும் சுயாதீனமாக எந்த ஸ்தாபனத்திலும் சேராமல் தனியாக இயங்கி வந்தால் உடனே ஏதாவது ஒரு பெரிய ஸ்தாபனத்துடன் அதிகாரப்பூர்வமாக இணைந்து கொள்ளுங்கள். அல்லது ஏற்கனவே நீங்கள் சார்ந்திருக்கும் ஸ்தாபனங்களுடன் கருத்து வேற்றுமையோ, தொடர்பில் இல்லாமலோ இருந்தால், மனஸ்தாபங்களை மறந்து, விரிசல்களை சரி செய்து, உடனே அவற்றின் தலைவர்களுக்கு இணங்கி உங்கள் உறவை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். உங்கள் வசிப்பிடத்திற்கு அருகாமையிலுள்ளவர்களிடம் மத வித்தியாசமின்றி நல்ல உறவு வைத்துக் கொள்ளுங்கள். அவர்களை கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு நாட்களில் சந்தித்து அவர்களுக்கு பலகாரம், பழங்கள் மற்றும் கேக் கொடுத்து உங்களின் அன்பை பரிமாறிக் கொள்ளுங்கள். அசதியாகவோ, அசட்டையாகவோ இருந்து விடாதீர்கள்.

வரும் காலத்தில் உங்கள் ஊழியத்திற்கு தேவ ஒத்தாசையுடன் மனித தயவும், உறவும் கட்டாயம் தேவை. **ஆடுகளை ஓநாய்களுக்குள்ளே அனுப்புகிறதுபோல, இதோ, நான் உங்களை அனுப்புகிறேன்; ஆகையால், சர்ப்பங்களைப்போல வினாவுள்ளவர்களும் புறாக்களைப்போலக் கபடற்றவர்களுமாய் இருங்கள்.** மத்தேயு 10:16. நம்மிடம் உள்ள சிறந்த சட்ட வல்லுனர்களும், கணக்கியல் வல்லுனர்களும், வேதப் பண்டிதர்களும் உங்களுக்கு ஊழிய நோக்குடன் உதவி செய்யக் காத்திருக்கிறார்கள்.

மேலும், ஒரு வேளை எந்த வேதகலாசாலையும் படித்துப் பட்டம் பெறாதவர்களாகவோ அல்லது போதிய கல்வி இல்லாதவர்களாகவோ இருந்து தேவ அழைப்பின் அடிப்படையில் விசுவாச ஊழியம் செய்கிறவர்களாகவோ நீங்கள் இருந்தால், தயவு செய்து இப்போதே ஏதாவது கல்லூரியில் நேரடியாக அல்லது தபால் அல்லது காணொலி (Online) மூலமாக ஒரு சிறு இறையியல் கல்வியை மேற்கொண்டு உங்களைத் தயார்ப்படுத்திக் கொள்ளுங்கள். எந்தக் கல்வியும், அதிகாரமும் அல்லது ஊழிய அங்கீகார சான்றும் (Ordination Certificate) இல்லாத ஊழியர்கள் உடனே உங்களை தயார்ப்படுத்திக் கொள்ளுங்கள். அங்கீகார சான்று (Ordination Certificate) உங்களுக்கு மிகவும் உதவிகரமாக இருக்கும். இதற்காக நீங்கள்

செலவு எதுவும் செய்ய வேண்டியதில்லை. நாம் எல்லாரும் ஒன்றாய் இணைந்துதான் செயல்பட வேண்டும். பிரிந்திருக்கக் கூடாது. **இதோ, சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது ?** சங்கீதம் 133:1

இந்த விஷயங்களில் உங்களுக்கு ஏதாகிலும் உதவிகள் / ஒத்தாசைகள் தேவைப்பட்டால் எங்களையும் நீங்கள் கடிதம் / மின்னஞ்சல் (E-mail) மூலம் தொடர்பு கொள்ளலாம். எங்களால் இயன்றவரை உதவி செய்வோம். ஒன்றுபடுவோம்! வெற்றி பெறுவோம்!!

கர்த்தருக்குச் சித்தமானால், இந்த புதிய ஆண்டில் பல வெளியூர் பிரயாணங்களை மேற்கொண்டு, தேவ ஊழியர்களை சுவிசேஷகர்களாக அதிகாரப்படுத்தவும், ஞானஸ்நானம் கொடுக்கவும், அங்கீகார சான்று (Ordination Certificate) பெறவும் உற்சாகப்படுத்தி பெலப்படுத்த வேண்டியிருக்கிறது. இதற்கு ஏதுவாக எங்கள் குடும்ப சூழ்நிலைகள், சரீர சுகம், பொருளாதாரம் ஒத்துவர தயவுசெய்து இப்பொழுதே ஜெபிக்க ஆரம்பியுங்கள்.

தற்போது நமது **அழைப்பின் எதிரொலி யுடியூப் சானலில்** செய்திகள் தினந்தோறும் காலை 5 மணிக்கும், ஞாயிறுதோறும் காலை 8 மணிக்கும் ஒளிபரப்பாகின்றன. மேலும் தேவசெய்திகள் ஞாயிறு தவிர இதர நாட்களில் ஆங்கிலத்திலும், இந்தியிலும் காலை 5.00 மணிக்கு ஒளிபரப்பாகின்றன. இவை பற்றிய தகவல்களை உடனுக்குடன் பெற Echo of His Call Channel-ல் subscribe செய்யுங்கள்.



**ஊடக ஊழியம்** ***(Media Ministry)***

நிரந்தரமான பொருளாதார ஒத்தாசையற்ற இவ்வூழியங்களுக்கு தேவன் உங்களை ஏவுகிறபடி உதவி செய்ய முன்வாருங்கள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நமக்கு எல்லாம் கொடுக்கிறவராக இருக்கிறார்.

கடந்த சுமார் 53 ஆண்டுகள் நம் ஊழியங்களை கரம் பிடித்து நடத்தி வருகிற நம் தேவாதிதேவன் உங்களையும் அபரிமிதமாய் ஆசீர்வதிப்பாராக! ஆமென்.


கிறிஸ்து இயேசுவுக்குள் உங்கள் ஊழியர்கள்,

**போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் & அலெக்ஸ் சாம்சன் சாம்.**

(+91) 98412 71858 / 98410 71858, மின்னஞ்சல் : samselvaraj333@gmail.com


... 1-ம் பக்கத் தொடர்ச்சி

இல்லாமல் நாம் எதையுமே செய்ய முடியாது என்று புரிந்து கொள்ள வேண்டும். "**நானே திராட்சச் செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனி களைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது**" யோவான் 15:5. எனவே 2023 ஆம் வருடத்தில் நாம் பிரவேசிக்கும்பொழுது, கர்த்தரோடு இணைந்து செயல்படவில்லை என்றால் நம்மால் ஒன்றும் செய்ய இயலாது என்ற சத்தியத்தை நிச்சயமாக நம்புவோம். ஆனால், தேவனால் எல்லாம் கூடும் என்பதையும் அறிந்து கொள்வோம்.

இரயில் நிலையங்களிலும், பெரிய பேருந்து நிலையங்களிலும், "குறைவான கைபெட்டிகள் அதிக சௌகரியத்தையும், சுகமான பயணங்களையும் தரும்," என்று பலகைகளில் எழுதியிருப்பதை நாம் கண்டிருப்போம். உலக பயணங்களில் மட்டுமல்ல, நம் வாழ்க்கைப் பயணத்திலும் இது உண்மையே. தேவையில்லாத அதிக பாரங்களை நாம் சுமந்து செல்லும்போது, நம்முடைய வாழ்க்கை மட்டுமில்லாமல் பிறருடைய வாழ்க்கையையும் நாம் வேதனைக்குள்ளாக்கி விடுகிறோம். பல வருடங்களாகத் திருத்தப்படாத தவறுகள், காயங்கள், வலிகள், தவறான தெரிந்து கொள்ளுதல்கள், கோபம், கசப்பு, எரிச்சல்கள், தோல்விகள் போன்ற கனமான சுமைகளைச் சுமந்து கொண்டு பல மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இத்தகைய சுமைகளின் தாக்கங்கள் இப்பொழுதுள்ள நம் உறவுகள், மற்றும் எதிர்காலத்தில் நமக்கு வரப்போகும் உறவுகள் ஆகியவற்றையும் பாதித்து ஒரு இணைசேதத்தை உருவாக்கும். நமது கடந்த காலத் தவறுகளை இயேசு மன்னித்து நித்திய கிருபையினால் அவர் நம்மை மூடி மறைக்கிறார். நமது தேவையற்ற பாரங்களை நமது சுமை மூட்டைகளிலிருந்து வெளியே எறிந்து விட்டு விடுதலையான வாழ்க்கையை வாழக் கற்றுக் கொள்வோம். தேவையற்ற அந்த சுமை நம் வாழ்க்கை பயணத்தை சிரமமானதாகவும், பாரமானதாகவும் மாற்றி விடும்.

நமது கர்த்தராகிய ஆண்டவர் நம் ஒவ்வொருவருக்கும் ஒரு திட்டத்தை வைத்திருக்கிறார். "**... நான் உங்கள் பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக்கேதுவான நினைவுகளே.**" என்று எரேமியா 29:11 இல் வாசிக்கிறோம். தேவ சித்தத்தையும், அவர் நமக்காக வைத்திருக்கும் திட்டங்களையும் புரிந்தவர்களாய் நமது ஆவிக்குரிய பயணத்தை நாம் துவங்க வேண்டும். அவ்வாறு செய்யும்பொழுது, நம் வாழ்க்கைப்பாதையை அறிந்தவர்களாகவும், அதிலே கவனம் செலுத்துகிறவர்களாகவும் காணப்படுவோம்.

எபேசிய சபைக்கு பவுல் எழுதிய நிருபத்தில், நமது வாழ்க்கை பயணத்தில் தேவையற்ற சுமைகள் பற்றி தெளிவாய் எழுதியுள்ளார்: "**சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும், மற்ற எந்த துர்க்குணமும் உங்களை விட்டு நீங்கக்கடவது. ஒருவருக் கொருவர் தயவாயும் மன உருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக் கொருவர் மன்னியுங்கள்**" எபேசியர் 4:31,32. பவுல் என்ன சொல்கிறார் என்றால், நமக்குத் தேவையானவற்றை மட்டும் நம் வாழ்க்கைப் பயணத்தில் எடுத்துக் கொண்டால், நம் பயணம் சுகமானதாக நமக்கு மட்டுமின்றி நம்மோடு பயணம் செய்பவர்களுக்கும் இருக்கும்.

நாம் சுமக்கும் தேவையற்ற 6 சுமைகளை பவுல் கீழே குறிப்பிடுகிறார்.

1. கசப்பு
2. மூர்க்கம்,
3. கோபம்,
4. கூக்குரல்
5. தூஷணம்
6. துர்க்குணம்

நாம் சுமக்க வேண்டிய, நமக்கு உதவுகின்ற பயனுள்ள தேவையான சுமை இவைகள்:

1. இரக்கம் (தயவு)
2. மன உருக்கம்
3. மன்னிக்கும் சுபாவம்

## 1. கசப்பு

எளிதில் விடமுடியாத ஒரு உணர்ச்சி தான் கசப்பு. நம்மை வேதனைப்படுத்திய மக்களோடு நாம் ஒப்புரவாக இந்த குணம்

நம்மை அனுமதியாது. நாம் பட்ட அவமானங்கள், காயங்கள் ஆகியவற்றைக் குறித்தே சிந்திக்கும்பொழுது, இந்த உணர்ச்சியை உணவூட்டி உயிரோடு வைத்துக் கொள்கிறோம். நமது மகிழ்ச்சியையும், மன சமாதானத்தையும் ஒரு புற்று நோயைப் போல பரவிக் கொன்று அழித்துவிடும். இந்த தேவையற்ற சுமைகள் நமது வாழ்க்கைப் பயணத்தைச் சிரமமானதாக மாற்றி விடும்.

## *2. மூர்க்கம்*

இது ஒரு வகைக் 'கோபம்' என்றும், வைக்கோலைப் போல விரைவாகத் தீப்பற்றி எரியக்கூடியது என்று 'பார்க்லி' என்ற எழுத்தாளர் தனது வேதாகம விமர்சனத்தில் குறிப்பிடுகிறார். "மூர்க்க வெறி" என்று நாம் குறிப்பிடுவது உண்டு. இந்த மூர்க்க வெறி நம்மை மிகுந்த சத்தத்துடன் அலற வைக்கும். நாம் யார் மூலமாவது தவறு இழைக்கப்பட்டு விட்டோம் என்று அறியும்போது இவ்வாறு நம்மையும் மீறி அடக்க முடியாத சத்தத்தோடு கூச்சலிட ஆரம்பித்து விடுவோம்.

கிறிஸ்தவ விசுவாசிகளையும் இந்த குணம் விட்டு வைப்பதில்லை. ஒருமுறை ஜான் என்பவர் ஞாயிறு காலையில் ஆலயம் செல்ல வாகனத்தை ஓட்டிக்கொண்டு வந்தார். காலையில் போக்குவரத்து மிகவும் அதிகமாக இருந்தது. அப்பொழுது ஜானின் வாகனத்தின் பின் வந்த ஒருவர், இவரைக் கடந்து செல்ல விரும்பி, தனது காரின் ஒலிப்பானை அதிகமாக அழுத்திக் கொண்டே வந்தார். அந்த நபருக்கு இணங்க முடியாத நிலையில் ஜான் ஓட்டிக் கொண்டிருந்தார். அந்த நபர் கடந்து செல்ல இடமே இல்லாதிருந்தது. எப்படியோ அந்த நபர் இவரைக் கடந்து செல்ல வாய்ப்பு கிட்டியது. அவ்வாறு கடக்கும்போது, வாகனத்தை சற்றே மெதுவாக ஓட்டி, ஜானைப் பார்த்து கெட்டவார்த்தைகளால் திட்டிவிட்டு போனார். ஜான் மனது காயப்பட்டது. ஆனால் அவர் பொறுமையைக் காத்துக் கொண்டார்.

ஆலயத்திற்குள் அவர் வந்தபோது, அதே வாகனம், தனது ஆலய வளாகத்தில் நிறுத்தப்பட்டிருந்ததைக் கண்டார். இதைவிட அதிர்ச்சி அவருக்குக் காத்துக் கொண்டிருந்தது. அந்த வாகனத்தை ஓட்டி வந்தவர், அந்த சபை மக்களுக்குப் புதிதாக நியமிக்கப்பட்ட போதகர் ஆவார். ஆலய ஆராதனைக்குப் பின் அந்த போதகர் ஜானை சந்தித்த போது அவர் நிலைமை என்னவாயிருந்திருக்கும் என்று நீங்களே நினைத்துப் பாருங்கள். கிறிஸ்தவர்கள் தங்களது சாட்சியைக் காத்துக் கொள்ள, சாலையில் கோபப்படுவதையும் தவிர்க்க வேண்டும்.

## *3. கோபம்*

கோபத்தை இரண்டாகப் பிரிக்கலாம்.

அ. நீதியான கோபம், ஆ. நீதியற்ற கோபம்

தமது பிதா தங்கும் ஆலயம் "**கள்ளர் குகை**" – யாக மாற்றப்பட்டதைக் கண்ட இயேசு கோபமடைந்தார் என்று மத்தேயு 21:13இல் வாசிக்கிறோம். அவர் ஒரு சாட்டையை எடுத்து அங்கு வியாபாரம் செய்து கொண்டிருந்தவர்களைத் துரத்தினார். இந்த நீதியான கோபத்தை மனிதர்களாகிய நாம் அப்பியாசப்படுத்த முடியாது. ஏனென்றால் நமது உணர்ச்சிகள் பாவத்தால் கறைப்பட்டிருக்கிறது. 'பாவத்திற்கு' விரோதமாக நாம் கோபம் கொள்ளலாம் என்று வேதாகமம் சொல்கிறது. **"கர்த்தரில் அன்புகூருகிறவர்களே, தீமையை வெறுத்து விடுங்கள் ...** " சங்கீதம் 97:10, "**நீங்கள் கோபங்கொண்டாலும், பாவஞ் செய்யாதிருங்கள் ...** " (சங்கீதம் 4:4). இதே வார்த்தைகளைத்தான் பவுல் அப்போஸ்தலனும் எபேசியர் 4:26 எச்சரிப்பின் வார்த்தையையும் சேர்த்துக் கூறுகிறார்: "**சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக் கடவது. பிசாசுக்கு இடங்கொடாமலும் இருங்கள்**" எபேசியர் 4:26,27, "நாம் ஞானமுள்ளவர்களா னால், கோபிக்கிறதற்குத் தாமதமாயிருக்கக் கடவோம்" யாக்கோபு 1:19, "**மனுஷருடைய கோபம் தேவனுடைய நீதியை நடப்பிக்க மாட்டாதே**" யாக்கோபு 1:20.

தேவையற்ற கனமான சுமையை நீக்கிவிட பவுல் 3 ஆலோசனைகளைத் தருகிறார். முதலாவதாக, "பாவம் செய்யாதிருங்கள்." பாவம் செய்யாமல் நீதியான கோபத்தை எப்படி வெளிப்படுத்துவது என்று நம் மனதில் ஒரு கேள்வி எழும்பலாம். "எபேசியருக்கு எழுதிய நிரூபத்தின் செய்தி" என்று ஜான் ஸ்டாட் என்பவர் தனது BST தொடர் செய்தியிலே இதற்கான ஒரு பதிலைத் தருகிறார். – "முதலாவதாக, காயப்பட்ட சுயபெருமை, பகை, பிறருக்குத் தீமை செய்யும் எண்ணம், எதிர்க்கும் எண்ணங்கள், பழி வாங்கும் ஆவி போன்றவை எதுவும் இல்லாத கோபமா என்று கவனிக்க வேண்டும். இரண்டாவதாக, சூரிய அஸ்தமனத்துக்கு முன்பாக நம் கோபம் தணிய வேண்டும். நமது கோபத்தை உணவூட்டி, பல நாட்கள் நம் மனதில் வைத்திருக்கக் கூடாது என்று புரிந்து கொள்ள வேண்டும். மூன்றாவதாக, நமது வாழ்க்கையில் பிசாசுக்கு இடம் கொடுத்து அவன் அமர நல்ல இடமுண்டாக்கிக் கொடுக்கக்கூடாது. நமது கோபம், வெறுப்பாக மாறி, வன்முறையாகவும் மாறி, நமது உறவையே முற்றிலும் முறித்து விடும் நிலைக்கு போய்விடாதபடி பிசாசுக்கு இடம் கொடுத்துவிடக்கூடாது. சாலமோன் என்ற ஞானமுள்ள ராஜா, இந்த பாரமான சுமையை நீக்கிவிட ஒரு ஆலோசனை தருகிறார்: "**மெதுவான பிரதியுத்தரம் உக்கிரத்தை மாற்றும்; கடுஞ்சொற்களோ கோபத்தை எழுப்பும்**" நீதிமொழிகள் 15:1. ஒரு சுகமான தடையற்ற பயணம் வேண்டுமானால் தேவையற்ற பாரமான சுமைகளை நாம் எடுத்தெறிந்து விட வேண்டும்.

## *4. கூக்குரல்*

கூக்குரலிடுவது என்றால் ஒரு சண்டை அல்லது கடுமையான வாக்குவாதம் போன்றவை கட்டுக்கடங்காத வகையில் மிகுந்த சத்தத்துடன் நடப்பதாகும். அநேக நேரங்களில் சபையின் உயர்நிலைக் குழுவினர், சபைக்குள்ளே இவ்வாறு கூக்குரலிட்டு சபைக்கு கெட்ட பெயரைக் கொண்டு வருகின்றனர். இந்தக் குழுவினரின் தேர்தல் சமயங்களில் இவ்வாறு

தொடர்ச்சி 6-ம் பக்கம்.....


**நெகேமியா வேதாகமக் கல்லூரி, சென்னை.**

*வேளச்சேரி – முழுநேரம் – இந்தி*
*சேப்பாக்கம் – மாலை நேரம் – தமிழ்*
(திங்கள், செவ்வாய், வியாழன்)

*Registered Candidate for Membership*
Asia Theological Association (ATA)

**உலகத்தின் தலைசிறந்த கிறிஸ்தவ தலைவர்கள் மற்றும் போதகர்களின் நன்மதிப்பைப் பெற்ற 53 வருட அனுபவ ஸ்தாபனம்.**

**Certificate in Theology : ஒரு வருடம்**
**Diploma in Theology : இரண்டு வருடங்கள்**

**கல்வித்தகுதி : 10ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல்**
**உடனே அணுகவும் !**

**தொடர்புக்கு : போதகர் எஸ். சாம் செல்வ ராஜ், நெகேமியா வேதாகமக் கல்லூரி,**
10, முகமது அப்துல்லா 2-வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91–44) 2852 8282, கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
**மின்னஞ்சல் :** sam@echoofhiscall.org /**இணையதளம் :** www.echoofhiscall.org

# பிரதானக் கட்டளைப் பங்காளர்

GREAT COMMISSION PARTNERS - PRAISE & PRAYER POINTS

**பகிர்தல்** (Share) (கலாத்தியர் 6:2), **உதவி செய்தல்** (Support) (ரோமர் 12:13) மற்றும் **துரிதப்படுத்துதல்** (Speed up) (II தீமோத்தேயு 1:6)

**துதி மற்றும் ஜெப குறிப்புகள் . 2023 ஜனவரி 19 முதல் பிப்ரவரி 18 வரை**

(இப்பகுதியைப் பிரித்தெடுத்து, மடித்து, உங்கள் வேதாகமத்தினுள் வைத்து தொடர்ந்து ஜெபியுங்கள்)

## தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்

ஜனவரி 19 ⇨ தலைமைச் சபை மற்றும் கிளைச் சபைகளில் கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு கொண்டாட்டங்கள் சிறப்பான முறையில் நடைபெற்றமைக்காக ...

ஜனவரி 20 ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி, நெகேமியா வேதாகமக்கல்லூரி** மற்றும் **அஞ்சலவழி இறையியல் கல்வி** ஆகியவற்றை கர்த்தர் ஆசீர்வதித்து வருவதற்காக ...

ஜனவரி 21 ⇨ நமது தலைமைச் சபையில் நடைபெறும் ஆண்கள் ஊழியத்தை கர்த்தர் ஆசீர்வதித்து வருவதற்காக ...

ஜனவரி 22 ⇨ நமது அச்சகத்திலேயே 16 மொழிகளில் அச்சடிக்கப் பட்டு எல்லா மிஷன் பணித்தளங்களுக்கும் அனுப்பப்படும் சுவிசேஷப் பிரசுரங்களை தேவன் ஆசீர்வதித்து வருவதற்காக ...

ஜனவரி 23 ⇨ கடந்த மாதத்தின் பொருளாதார மற்றும் ஆவிக் குரிய தேவைகளை சந்தித்த கிருபைக்காக ...

ஜனவரி 24 ⇨ நமது தலைமைப் போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களையும், அவர்கள் குடும்பத்தையும் ஆசீர்வதித்து வருகிறதற்காக ...

ஜனவரி 25 ⇨ வேதாகம கருத்தரங்குகளை தொடர்ந்து நடத்தி வருவதற்காக ...

ஜனவரி 26 ⇨ நமது ஜெபப்பங்காளர்கள், சந்தாதாரப் பங்காளர்கள், விசுவாசப் பங்காளர்கள், ஆயுள் பங்காளர்கள் மற்றும் பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் அனைவரையும், அவர்களது குடும்பத்தாரையும் கர்த்தர் ஆசீர்வதித்து வருவதற்காக ...

ஜனவரி 27 ⇨ நமது முழுநேர **நெகேமியா வேதாகமக்கல்லூரி** மாணவர்களுக்கு இசைப் பயிற்சி வகுப்புகளை நடத்த வைக்கின்ற கிருபைக்காக ...

ஜனவரி 28 ⇨ நமது சபைகளின் எழுப்புதலுக்குரிய புதிய விசுவாசிகளை ஆசீர்வதித்ததற்காக ...

ஜனவரி 29 ⇨ புதிய பணியாளர்களை தந்து நமது ஊழியங்களை (நிறுவனத்தை) ஆசீர்வதித்து வருவதற்காக ...

ஜனவரி 30 ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளியில்** ஏழை கிராம மாணவர்களுக்கு மாலை நேரத்தில் இசை பயிற்சி (கீபோர்டு, கிதார்) வகுப்புகளை நடத்த வைக்கின்ற கிருபைக்காக ...

ஜனவரி 31 ⇨ நமது **அழைப்பின் எதிரொலி** இணை ஆசிரியர்களுக்காகவும் மற்றும் அவர்களது ஈடுபாட்டிற்காகவும்...

பிப்ரவரி 01 ⇨ நமது முழுநேர **நெகேமியா வேதாகமக்கல்லூரி** மாணவர்கள் மாலை நேரங்களில் விளையாடு வதற்காக கேரம் போர்டுகள் மற்றும் செஸ் போர்டுகள் வாங்க வைத்த கிருபைக்காக ...

பிப்ரவரி 02 ⇨ நமது தலைமைச் சபை, கிளைச் சபைகள் மற்றும் அதன் விசுவாசிகளையும், ஊழியர்களையும் ஆசீர்வதித்து வருவதற்காக ...

பிப்ரவரி 03 ⇨ நமது மருத்துவ ஊழியத்தில் கர்த்தர் நடத்தி வரும் அற்புதங்களுக்காக ...

## தேவனிடத்தில் ஜெபியுங்கள்

பிப்ரவரி 04 ⇨ எல்லா கிறிஸ்தவ ஸ்தாபனங்களின் ஆசீர்வாதங் களுக்காகவும் அவற்றின் பாதுகாப்பிற்காகவும் ...

பிப்ரவரி 05 ⇨ உலகமெங்கிலும் சமாதானம் நிலவிட ...

பிப்ரவரி 06 ⇨ பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிராக நடைபெறும் வன்முறைகள் நீங்க ...

பிப்ரவரி 07 ⇨ இந்த மாதத்தின் **அழைப்பின் எதிரொலி ஊழியத்தின்** அனைத்துத் தேவைகளையும் கர்த்தர் சந்திக்க ...

பிப்ரவரி 08 ⇨ **அழைப்பின் எதிரொலி ஊழியத்தின்** பணியாளர்கள் அனைவரும் நல்ல உடல்நலத்துடன் திகழ ...

பிப்ரவரி 09 ⇨ சகலவிதமான நிலைகளிலும் மற்றும் திட்டமிடு தலிலும் உலக நாடுகள் ஒற்றுமையுடனும், முன்னேற்றத்துடனும் காணப்பட ...

பிப்ரவரி 10 ⇨ நமது அனைத்து **அழைப்பின் எதிரொலி** இணை ஆசிரியர்களுக்காகவும், அவர்களின் குடும்ப அங்கத்தினர் களுக்காகவும் ...

பிப்ரவரி 11 ⇨ நமது தலைமைப் போதகர் எழுதிவரும் சுயசரிதைக்கான வழிநடத்துதல்களையும் மற்றும் வழிவாசல்களையும் அபரிமிதமான அளவில் ஆசீர்வதிக்க வேண்டி ...

பிப்ரவரி 12 ⇨ நமது பொருளாதாரத் தேவைகள் அனைத்தும் சந்திக்கப்பட வேண்டி ...

பிப்ரவரி 13 ⇨ ஆண்டவரது இராஜ்யம் பூமியில் நிலைப்பட மேலும் கூடுதலான தரிசனங்களை நம்மிடத்தில் அருளவேண்டி ...

பிப்ரவரி 14 ⇨ சுவிசேஷம் சென்றடையாத இந்திய நாட்டின் பகுதிகள் அனைத்திற்கும் சுவிசேஷத்தைக் கொண்டு சென்றிட நமக்கு வாய்ப்பளிக்க வேண்டி ...

பிப்ரவரி 15 ⇨ நமது நிறுவனத்திற்காகவும், நிறுவனத்தில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களுக்காகவும் மற்றும் அவர்களது குடும்பத்திற்காகவும் ...

பிப்ரவரி 16 ⇨ **அழைப்பின் எதிரொலியின்** வாலிப மற்றும் கள ஊழியங்களுக்காக ...

பிப்ரவரி 17 ⇨ நமது தலைமைப் போதகர் மற்றும் குடும்பத்தினரின் நல்ல ஆரோக்கியத்திற்காக ...

பிப்ரவரி 18 ⇨ மது அருந்தும் பழக்கம் உடையோர் மற்றும் தீயபழக்கம் கொண்டோர் மனந்திரும்ப ...

... 4-ம் பக்கத் தொடர்ச்சி

அவர்கள் செய்வதினால் காவல் துறையினர் தலையிட்டு அதைத் தடுத்து நிறுத்தியுள்ளதை நாம் கேட்டிருக்கிறோம் அல்லவா? பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதிய முதல் நிருபத்தில் சபை கண்காணியான வனுக்கு இருக்க வேண்டிய நற்குணங்களைப் பட்டியலிடும்பொழுது பிறரை அடிக்காதவன், இச்சிக்காதவன், பொறுமையுள்ளவன், சண்டை பண்ணாதவன், பண ஆசை இல்லாதவன் என்று குறிப்பிடுகிறார். **“சண்டைக்காரியோடே ஒரு பெரிய வீட்டில் குடியிருப்பதைப் பார்க்கிலும், வீட்டின் மேல் ஒரு மூலையில் தங்கியிருப்பதே நலம்”** நீதிமொழிகள் 21:9 என்று ஞானமுள்ள சாலமோன் ராஜா குறிப்பிடுகிறார்.

## 5. தூஷணம்

பிறருடைய முதுகுக்குப்பின், பிறரைப் பற்றி தவறாகப் பேசுவதுதான் தூஷணம். அவர்களுடைய நற்பெயர் தூற்றப்பட்டு கெடுக்கப்படும்போது, அவ்வாறு பேசுபவர்களின் பெயரும் கெட்டுப்போகும். மிரியாமும் ஆரோனும், மோசே விவாகம் பண்ணின எத்தியோப்பியா தேசத்து ஸ்திரீயினிமித்தம் அவனுக்கு விரோதமாய்ப் பேசினார்கள் எண்ணாகமம் 12:1. **“கர்த்தர் அதைக் கேட்டார்”** எண்ணாகமம் 12:2 என்று வாசிக்கிறோம். மிரியோம், ஆரோன் ஆகியோரிடம் தேவன் கோபங்கொண்டு, **“... நீங்கள் என் தாசனாகிய மோசேக்கு விரோதமாய்ப் பேச, உங்களுக்குப் பயமில்லாமற் போனதென்ன என்றார்”** எண்ணாகமம் 12:8. உடனேயே தேவ கோபாக்கினை அவர்கள்மேல் வந்தது. மிரியாம் உறைந்த மழையின் வெண்மை போன்ற குஷ்டரோகியானாள். **“... நீங்கள் இருளிலே பேசினது எதுவோ, அது வெளிச்சத்திலே கேட்கப்படும்; நீங்கள் அறைகளில் காதிலே சொன்னது எதுவோ, அது வீடுகளின்மேல் கூறப்படும்”** லூக்கா 12:3. என்று இயேசு எச்சரித்துள்ளார். ஆகையால்தான் யாக்கோபு தனது மூன்றாம் அதிகாரத்தில், நமது நாவை அடக்குவது பற்றி ஒரு பெரிய பிரசங்கத்தையே எழுதி வைத்துள்ளார். தூஷணம் என்பது நமக்குத் தேவையற்ற கனமான சுமை. அதை எடுத்து எறிந்து விடுவோம்.

## 6. துர்க்குணம்

துர்க்குணம் என்றால் 'கெட்ட எண்ணம்'. பிறரைக் குறித்து தீமையான காரியங்களைத் திட்டமிடுவது, பிறருக்குக் கெட்டவை நடக்க வேண்டும் என்று விரும்புவது 'துர்க்குணம்' என்று வகைப்படுத்தலாம். ஆதியாகமம் 37 ஆம் அதிகாரத்தில் துர்க்குணத்திற்குரிய சரியான உதாரணத்தைக் காணலாம். யோசேப்புக்கு எதிராக அவனது சகோதரர்கள் தீமையான திட்டம் தீட்டினார்கள். **“நாம் அவனைக் கொன்று, இந்தக் குழிகள் ஒன்றிலே அவனைப்போட்டு, ஒரு துஷ்ட மிருகம் அவனைப் பட்சித்தது என்று சொல்லுவோம் வாருங்கள்...”** ஆதியாகமம் 37:20. என்று அவர்கள் ஒருவரை ஒருவர் நோக்கி கூறிக்கொண்டனர். ஆனால் தேவ சித்தம் வேறாயிருந்தது. ரூபனைக் கொண்டு யோசேப்பின் உயிர் காப்பாற்றப்பட்டது. அதே போலவே, ஆமான் மொரதெகாய்க்கு எதிராகத் திட்டம் போட்டு, அவனுக்காக 75 அடி உயர தூக்குமரத்தை உண்டாக்கினான் எஸ்தர் 5:14. ஆனால் அத்திட்டம் அவனுக்கு எதிராகவே மாறினது. அதே தூக்கு மரத்தில் ஆமான் தூக்கிப் போடப்பட்டான். (எஸ்தர் 7:9,10).

மேற்கண்ட இந்த 6 தேவையற்ற சுமைகளை நாம் அறிந்து கொண்டோம். இவை நம் சுகமான பயணத்தை வெகுவாய்த் தடை செய்யும். அவ்வாறு நம் பயணத்தைத் தடை செய்யும் சுமைகள் எவை என்று அறிந்து அவற்றை நம்மிடத்திலிருந்து வெளியாக்கி விட வேண்டும்.

### முதன் முதலாக எடுக்க வேண்டிய படி என்ன ?

நமது ஆத்துமாவிற்குள் இருக்கும் தேவையற்ற சுமை என்ன என்று உண்மையாய்த் தேட வேண்டும். கசப்பு, மூர்க்கம், கோபம், கூக்குரல், தூஷணம், துர்க்குணம் என்பவை களில் எவை நமக்குள் காணப்படுகின்றன ? பின்பு அவைகளை தேவனிடத்தில் ஜெபத்தின் மூலமாகக் கொண்டு வந்து, அவற்றை நம்மை விட்டு நீக்கிவிட அவரிடத்தில் உதவி கேட்க வேண்டும். நம்மை வழிநடத்துகிற, நாம் நம்பக்கூடிய ஜெபப்பங்காளரிடம் பகிர்ந்து கொள்ளலாம். நம்மை வழிநடத்துகிறவரோ அல்லது நம் நம்பிக்கைக்குரிய நண்பரோ, நம்மிடம் உள்ள வேதனைப்படுத்தும் குணங்களைக் கண்டறிய உதவி செய்யலாம். நாம் காணக்கூடாத சில குணங்களை அவர் கண்டறியலாம்.

### இரண்டாவது படி என்ன ?

அந்த கெட்ட குணங்களைத் தூக்கி எறிந்து விட வேண்டும். அதைப் பிடித்து வைத்துக் கொள்ளக்கூடாது. ஒருவேளை அவ்வாறு செய்வது சற்று கடினமாக இருக்கலாம். நமது சொந்த பெலத்தினாலோ முயற்சியினாலோ அதைச் செய்ய முடியாது. ஏனென்றால் நமக்குள்ளேயே இரண்டு எதிர்மறையான வல்லமைகள் ஒன்றுக்கு விரோதமாய் மற்றொன்று கிரியை செய்கின்றன. ஒன்று நல்லது; மற்றொன்று தீமையானது. இப்படிப்பட்ட நிலையில்தான் பவுல் கதறுகிறார்: **“நிர்ப்பந்தமான மனுஷன் நான்! இந்த மரணசரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்?”** ரோமர் 7:24 ஆனால் இதற்கான பதில் தேவனிடத்தில் உண்டு என்று சமாதானமடைகிறார்: **“நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்** ...” ரோமர் 7:25. அந்த தேவையற்ற சுமையை நீக்க சர்வ வல்லமையுள்ள தேவனின் வல்லமை நமக்குத் தேவைப்படுகிறது. நமது கர்த்தர் நமக்கு ஒரு ஆலோசகரும் ஆறுதலளிப்பவருமாகிய பரிசுத்த ஆவியானவரை நமக்குத் தந்தருளியுள்ளார். தேவகுமாரனாகிய இயேசு நமக்காகப் பரிந்து பேசுகிறார். நம் ஜெபத்தில் நமக்கு வார்த்தைகள் வராதபோது வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு, சரியான வார்த்தைகளை பரிசுத்தஆவியானவர் நம் வாயில் போடுகிறார். பிதாவாகிய தேவன் நம் ஜெபங்களைக் கேட்டு பதிலளிக்கிறார். இந்த நம்பிக்கையுடன் நாம் கிருபாசனத்தைத் தைரியமாக அணுகலாம். கர்த்தர் நம்மை விடுவிப்பார். “சோதனையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும்,” என்று ஜெபிக்க இயேசு நமக்குக் கற்றுத் தந்திருக்கிறார். நம் வாழ்க்கையிலுள்ள தேவையற்ற அதிக சுமைகளை நம்மைவிட்டு நீக்க நாம் பிதாவின் உதவியை நாட வேண்டும்.

### மூன்றாவது படி என்ன ?

நமது ஆத்துமாக்களை எதிர் மருந்துகளால் (antidotes) போஷிக்க வேண்டும். எந்த விஷத்திற்கும் ஒரு எதிர்மருந்து உண்டு. எபேசியர் 4:32இல் இந்த 6 விஷத்தன்மையுள்ள குணங்களுக்கும் மூன்று எதிர் மருந்துகளைப் பரிந்துரைக்கிறார்: **“ஒருவருக்கொருவர் தயவாயும் மன உருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்”**

## 1. தயவு

தயவு பாராட்டுதல் என்பது ஒரு நற்குணம். நம் ஒவ்வொருவரிடமும் காணப்பட வேண்டிய முக்கியமான நற்குணங்களில் ஒன்றுதான் இந்த தயவு அல்லது இரக்கம் என்ற நற்குணம். நாம் பிறரிடம் தயவு காண்பிக்கும்பொழுது, பிறர்மேல் நமக்கு அக்கறை இருக்கிறது என்று அவர்கள் அறிந்து கொள்வார்கள். அவ்வாறு நாம் தயவு காண்பிக்கும்பொழுது அவர்களது வலியும், வேதனையும் நீங்கிப்போகும். 'தயவு' அல்லது 'இரக்கம்' என்பது உதவி தேவைப்படுகிறவர்களுக்கு நல்ல எண்ணத்தோடு உதவுதல் ஆகும். பெலனுள்ளவர்கள் பெலனற்ற நிலையிலுள்ளவர்களுக்கு ஏதாவது நன்மை செய்வதுதான் 'இரக்கம்'. இரக்க குணம் மற்றவர்களுக்கு எதையாவது கொடுக்க வைக்கும். நமக்கு தேவன் பல ஆசீர்வாதங்களை தந்துள்ளதால் பிறருக்குக் கொடுக்க நம்மிடம் வழிகள் உண்டு.

கிறிஸ்துவின் மரணத்தினாலும் உயிர்த்தெழுதலினாலும் நமக்கு பரிபூரண ஜீவன், இரட்சிப்பு, விடுதலை, அளவில்லாத தேவகிருபை ஆகியவை நமக்கு உண்டு. நாம் பெலவீனமானவர்களானாலும், கிறிஸ்துவுக்குள்ளாய் நாம் பெலவான்களாயிருக்கிறோம். இந்த நிலைதான் பிறருக்குத் தயை காண்பிக்க வைக்கிறது. நம்மால் அவர்களை மன்னிக்க முடியும். மன்னிக்கும் குணம் நமது பெலவீனத்தை அல்ல, நமது இரக்க குணத்தையும் பெலத்தையுமே வெளிப்படுத்துகிறது.

## உ. மன உருக்கம்

மனஉருக்கம் 'சேர்ந்து பாடுபட' வைக்கும். பிறருடைய பாடுகளை நேரில் காணும்போது, அந்த பாடுகளிலிருந்து அவர்களை எப்படியாவது விடுவிக்க வேண்டும் என்ற ஏவுதல் ஏற்படுவதும், விரைவில் அவர்களை அந்த பாடுகளிலிருந்து விடுபட வேண்டும் என்று விரும்புவதுமே 'மன உருக்கம்' எனலாம். 'மன உருக்கம்' அவர்களுக்கு ஏதாவது உதவ வேண்டும் என்ற எண்ணத்தைக் கொடுக்கும். யாராவது ஒரு பிரச்சினையிலிருக்கும்போது, ஓடிப்போய் அதில் தலையிட்டு உதவச் செய்யும். உதாரணமாக, நாம் ஒரு பேருந்தில் பயணம் செய்யும் பொழுது, ஒரு கர்ப்பிணியைக் கண்டால், உடனேயே எழுந்து, நமது இருக்கையை அவளுக்கு அளித்தல் மன உருக்கம் ஆகும். எதிர்மறை உணர்ச்சிகளை நீக்க நாம் ஒவ்வொரு நாளும் செய்யும் சிறிய நற்கிரியை, உதவுகிறது. நம்மை அழுத்தத்திற்குள்ளாக்கும் தேவையற்ற சுமைகளை நீக்கும் நல்ல எதிர்மருந்துகளாக இந்த நற்கிரியைகள் மாறி, வாழ்க்கைப்பயணத்தை இலகுவாக்குகிறது. மாற்கு 6:34 இல் மேய்ப்பனில்லாத ஆடுகளைப் போலிருந்த மக்களை இயேசு காண்கிறார். அவரது இருதயத்தில் மனதுருக்கம் பொங்கியது. அம்மக்களின் ஆவிக்குரிய பசியை மட்டும் அவர் நீக்காமல் அவர்களின் சரீர பசியையும் நீக்கினார் (மாற்கு 6:37–44).

சோதோமை தேவன் அழிக்கப் போகிறார் என்று ஆபிரகாம் அறிந்தபொழுது, சோதோமில் உள்ள நீதிமான்களுக்காக அவன் மனதுருக்கம் உடையவனாய், தேவனிடத்தில் கெஞ்சி ஜெபிக்கத் தொடங்கினான். சோதோமில் 50 நீதிமான்கள் இருந்தால் நகரத்தை தேவன் அழிக்க வேண்டாம் என்று கேட்க ஆரம்பித்தான். தேவனும் 50 நீதிமான்களுக்காக சோதோமை அழிக்க மாட்டேன் என்று கூறினார். ஆனால், ஆபிரகாம் தொடர்ந்து கெஞ்சினான். ஆபிரகாமுக்கே தெரியும் சோதோமில் 50 நீதிமான்கள் இல்லை என்று. எனவே, 50 இலிருந்து குறைத்து 45, 40, 35, 30, 10 என்று கேட்க ஆரம்பித்தான். இதுதான் மனதுருக்கம்.

## ஊ. மன்னிக்கும் ஆவி

தயையும் மனதுருக்கமும் பிறரை மன்னிக்க நம்மை வழிநடத்தும். நமது எல்லா உறவுகளுக்கும் அடிப்பாறையாக மன்னிக்கும் குணம் அமைந்துள்ளது. ஒரு கிறிஸ்தவ விசுவாசிக்குத் தவிர்க்க முடியாத குணம்தான் மன்னிக்கும் குணம். ஏனென்றால் கிறிஸ்தவர்கள் மன்னிக்கப்பட்டவர்கள். தேவன் நம்மை மன்னித்ததினால் நாமும் மன்னிக்க வேண்டும். மனிதர்கள் நமக்கு வேதனை கொடுக்கும்போது, கசப்பு, மூர்க்கம், கோபம், சண்டை, தூஷணம், தீமை செய்தல் போன்றவைகள் நமக்கு வரலாம். இந்த உணர்ச்சிகள் வெளிப்படும் போது அழிவுக்கேற்ற நடத்தை அல்லது பேச்சு வெளிப்படுகிறது. இத்தகைய உடனடி உணர்ச்சிகள் நமது உறவுகளை முறித்து விடுகிறது என்று அந்த நேரத்தில் நாம் அறிவதில்லை. நம்மை வேதனைப்படுத்தினவர்களை மன்னிப்பதுதான், உடைந்த அல்லது கடினப்பட்ட உறவுகளைச் சீர்ப்படுத்தும் ஒரே வழி. இப்பொழுது நாம் கற்றுக் கொண்டிருக்கும் முழு பாடத்தையும், 'மன்னிப்பு' என்ற ஒரே வார்த்தையில் அடக்கி விடலாம்.

தேவன் நம் பாவங்களை மன்னித்தது போல, நாமும் மன்னிக்க வேண்டும் என்று பவுல் கூறுகிறார். "... **பாவ மன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது**" எபேசியர் 1:7 என்று பவுல் குறிப்பிடுகிறார். தேவனோடு நாம் கொண்டிருக்கும் உறவின் மையத்தில் 'மன்னிப்பு' இருக்கிறது. தேவன் நமது பாவங்களை அழித்து நீக்கி, நம்மேல் வரவிருந்த தேவ கோபாக்கினையை நீக்கி, மரணத்திலிருந்த நம்மை உயிர்ப்பித்து ஜீவனைக் கொடுத்துள்ளார். நம்ப முடியாத அளவுக்கு தேவன் நமக்கு இரக்கமும் மனதுருக்கமும் காண்பித்திருக்கிறார். கிறிஸ்துவின் மூலமாக, பாதுகாப்பான மகிமையான எதிர்காலம் நமக்கு முன் இருக்கிறது. தேவன் நம்மை மன்னித்திருக்கிறபடியால், பிறரை நாம் மன்னிக்க ஒரு காரணமும், பெலனும் நமக்கிருக்கிறது. நமது பாவங்களை அழித்து நம்மை கிறிஸ்துவின் மூலம் பரிசுத்தவான்களாகவும், பிழையற்றவர்களாகவும் தேவன் பார்ப்பதால், நாமும் பிறருக்கு அவ்வாறே செய்து அவர்களைப் பரிசுத்தவான்களாகப் பார்க்க வேண்டும். பிறர் நமக்குச் செய்த தவறுகள் என்ற பட்டியலிலிருந்து அந்த பாவங்களை நீக்கிவிட வேண்டும். நாம் ' தேவனைப் பின்பற்றுகிறவர்களாக வேண்டும்' என்று பவுல் விரும்புகிறார். **"கிறிஸ்து நமக்காகத் தம்மை தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்பு கூர்ந்தது போல, நீங்களும் அன்பிலே நடந்து கொள்ளுங்கள்"** எபேசியர் 5:2 என்கிறார் பவுல். நமது வாழ்வில் நாம் தேவனைப் பின்பற்ற வேண்டுமானால், மன்னிக்கும் ஆவியை நமக்குள் உள்வாங்கி காத்துக் கொள்ள வேண்டும்.

பிறரை மன்னிக்க முடியாத சுபாவம் நமது வாழ்க்கை பயணத்தை மிகுந்த சிரமத்துக்குள்ளாக்கும். நம்மைக் கீழே விழத் தள்ளி முன்னேற முடியாமல் தடுத்து விடும். ஒரு கிறிஸ்தவனுக்கு இருக்க வேண்டிய அடிப்படை நற்குணங்களில் ஒன்றுதான் மன்னிக்கும் குணம். நமது பாவங்களெல்லாம் மன்னிக்கப்பட்டன; அப்பாவங்களால் வரவிருந்த பாதிப்புகளிலிந்தும் நாம் விடுவிக்கப்பட்டுள்ளோம். எனவே நமக்கெதிராய்ப் பிறர் செய்த பாவங்களை மன்னிக்க நாம் கடமைப்பட்டுள்ளோம். நாம் அவ்வாறு மன்னிக்கவில்லை என்றால், நம்மை விசுவாசிகள் என்று அழைத்துக் கொள்ள நாம் தகுதியற்றவர்கள். **"மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார். மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார்"** மத்தேயு 6:14,15 என்று இயேசு கிறிஸ்து நமக்கு போதித்துள்ளார். மேலும், **"நீங்கள் நின்று ஜெபம் பண்ணும்போது, ஒருவன் பேரில் உங்களுக்கு யாதொரு குறை உண்டாயிருக்குமானால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களை உங்களுக்கு மன்னிக்கும்படி, அந்தக் குறையை அவனுக்கு மன்னியுங்கள்"** என்று மாற்கு 11:25 – இல் கூறியுள்ளார். நாம் பிறரை மன்னித்ததால் தான் தேவன் நம்மை மன்னிக்கிறார் என்றும் நாம் பெருமையாய் நினைத்துக் கொள்ளக் கூடாது. அவருடைய மிகுந்த கிருபையால் மட்டுமே அவர் நம்மை மன்னிக்கிறார் என்று புரிந்து கொள்ள வேண்டும். நாம் ஏற்கனவே கற்றுக் கொண்ட 6 தேவையற்ற சுமைகளுக்கு நேராய், இந்த

தொடர்ச்சி 9-ம் பக்கம்.....


### வருமான வரி விலக்கு – ஏழை மக்களின் கல்வி மற்றும் மருத்துவ உதவிகளுக்கு

இந்திய வருமான வரிச்சட்டம் பிரிவு 80G–கீழ் ஏழை, எளியோருக்கு மருத்துவம் மற்றும் சமுதாய முன்னேற்றத்திற்கான உதவி செய்வதற்காக "அழைப்பின் எதிரொலி" அறக்கட்டளைக்குத் தனிநபர் மற்றும் ஸ்தாபனங்கள் தரும் நன்கொடைகள் வருமான வரிச்சட்டப் பிரிவு 80G–யின் கீழ் வரிவிலக்குப் பெறத் தகுதியுடையவை. வருமான வரிக் கணக்குகளுக்கான அலுவலக இரசீது நம் அலுவலகத்திலிருந்து வழங்கப்படும். அப்படிப்பட்ட நன்கொடைகளுக்கான பணவிடைத்தாள்களை (Demand Drafts) "Echo of His Call Educational Trust" என்ற பெயருக்கு எடுத்து அனுப்பும்போது **ஆதார் மற்றும் பான் (PAN) நம்பர்களை தெரியப்படுத்தி வருமானவரி விலக்கு பெறுங்கள்.** மேலும் விபரம் வேண்டுவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

| | |
|---|---|
| **Account Name** | **: ECHO OF HIS CALL EDUCATIONAL TRUST** |
| **Account Number** | **: 1023 2923 805** |
| **Bank Name** | **: STATE BANK OF INDIA** |
| **Branch** | **: TRIPLICANE, CHENNAI - 600 005** |
| **IFSC Code** | **: SBIN 0000249** |
| **SWIFT Code** | **: SBI NIN BB 455** |



# ஆழக்குழியிலிருந்து அரண்மனைக்கு!

# PIT TO PALACE

வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன் (மத்தேயு 24:15)

(போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் வாழ்க்கை அனுபவங்கள்)

## கர்த்தர் என் வாழ்க்கையை மாற்றினார்!

அவர் சிறியவனைப் புழுதியிலிருந்து தூக்கிவிடுகிறார்; எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்துகிறார்.சங்கீதம் 113:7

என்னுடைய உலகப்பிரகாரமான வேலை நேரம் தவிர இதர நேரங்களிலும், நாட்களிலும் நான் இலவச அச்சுப்பிரதி விநியோகம், தனிநபர் ஊழியம், சுவிசேஷக் கூட்டங்கள் – போன்ற ஊழியங்களை சிறிய அளவில் செய்ய தேவன் தயவு பாராட்டினார்.

1971–ம் ஆண்டு என்னுடன் பணிபுரிந்த காலஞ்சென்ற என் அன்பு சகோதரர் D.W. தேவகாந்தன் அவர்கள் மற்றும் சகோதரர் R.E. ஜெயராஜ் அவர்கள் என்னிடம் வந்து "நீ இந்த அலுவலகத்தில் ஓர் தனித்துவமான நபராக இருக்கிறாயே! உன்னிடம் ஏதோ ஒரு தனித்தன்மை இருக்கிறதே!! என்ன காரணம்? நீ ஓர் கிறிஸ்தவனா? என்றும் கேட்டார்கள். அதற்கு நான், "ஆம்! வானத்தையும், பூமியையும் படைத்த சர்வ வல்ல ஆண்டவர் இயேசு கிறிஸ்துவால் இரட்சிக்கப்பட்ட தேவமகன்!" என்று பதில் அளித்தேன். அவர்கள் என்னை மறுபடியும் பார்த்து, "நீ ஓர் சுறுசுறுப்பான பையன்! (smart boy) இன்னும் அந்த இரட்சிப்பின் அனுபவத்தில் இருக்கிறாயா?" என்று கேட்டார்கள். நான் "ஆம்" என்றேன். சகோதரர் D.W. தேவகாந்தன் அவர்கள் என்னை அப்படியே கட்டி அணைத்துக் கொண்டு "உன்னை என் போதகரிடம் வருகிற ஞாயிறு காலையில் அழைத்துச் செல்வேன்; வருவாயா?" என்று கேட்டார்கள். நான் "சரி" என்றேன்.



சகோ. *D.W.* தேவகாந்தன்

அதன்படி 1971–ம் ஆண்டு டிசம்பர் மாதம் என்னை அப்போஸ்தலர் கிறிஸ்தவ சபை தலைமை போதகர் ஜி. சுந்தரம் அவர்கள் மற்றும் உதவி போதகர் எம்.கே. சாம் சுந்தரம் அவர்களிடமும் தன்னுடைய மிதிவண்டியின் பின்னால் உட்கார வைத்து அழைத்துச் சென்றார்கள். தலைமை போதகர் ஜி. சுந்தரம் அவர்கள் என்னிடம் கொண்ட கலந்துரையாடல் மறக்கமுடியாத ஒன்றாக இருக்கிறது. அவர்களுடைய அழகான தோற்றம், புன்சிரிப்பு, கரிசனை மிகுந்த பொறுப்பு மிக்க வார்த்தைகள் என் தகப்பனாருடைய உறவைப் போன்றதாக இருந்ததால், "நானும் தங்களைப் போல மாற ஆசிக்கிறேன்" என்று அவர்களிடம் சொன்னேன். அவர்களும் என்னைக் கட்டியணைத்து முத்தமிட்டார்கள். மேலும் அவர்கள், "அந்த இலக்கை அடைவதற்கு நீ கடின வாழ்க்கை முறையோடு, மிகப்பெரிய விலைகிரயம் செலுத்த வேண்டியிருக்கும்" என்றார்கள். அதற்கு நான் "முழுமனதுடன் (என்னை ஒப்புக் கொடுத்து) செயல்படுவேன்" என்றேன். அந்த நாள் முதல் நான் அவர்கள் சபையில் ஓர் தீவிர அங்கத்தினராகவும், பணிவிடைக்காரனாகவும் மாறினேன். அவருடைய சபைப் பிரசங்கங்களும், செயல்பாடுகளும் என்னை மிகவும் கவர்ந்திழுத்தன.



தலைமை போதகர் *G.* சுந்தரம்



உதவி போதகர் எம்.கே. சாம் சுந்தரம்

தொடர்ந்து அவர்களுடைய உதவிப் போதகராயிருந்த போதகர் எம்.கே. சாம் சுந்தரம் அவர்களுடன் சேர்ந்து சிறிய அளவில் சபையில் பயன்பட்டேன். அவர்களும் என்னை போதித்துப் பராமரித்தார்கள்.

அச்சமயம் அந்த சபையில் ஊழியம் செய்த சகோதரர்கள் விக்டர் சுவாமிதாஸ் (ரயில்வேத்துறை), A. செல்வராஜ் (பொதுபணித்துறை), போதகர் ஜெயமோகன் (ஆசிரியர்), சுவிசேஷகர் என். ஜீவானந்தம் ஆகியோர் எனக்கு ஆவிக்குரிய பிரகாரமான பராமரிப்பாளர்களாக அமைந்தார்கள்.



சகோ. விக்டர் சுவாமிதாஸ்

1972–ல் போதகர் ஜி. சுந்தரம் அவர்களால் எனக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டதுடன், 1977–ல் துணை போதகர் எம். கே. சுந்தரம் மற்றும் போதகர் ரூபன் தீமோத்தி (தென் ஆப்பிரிக்கா) அவர்களின் முன்னிலையில் ஊழியக்காரனாக பிரதிஷ்டையும் செய்யப்பட்டது.

போதகர் ஜி. சுந்தரம் அவர்களால் எனக்கு, போதகர் ஆனந்த் அவர்களோடு சேர்ந்து சபைக்கு வருபவர்களின் காலணிகளை பராமரிக்கும் ஊழியம் ஒப்படைக்கப்பட்டது.

பொதுவாக சபை ஆராதனைக்கு வரும் மக்கள் அவர்களுடைய காலணிகளை ஆலயத்திற்கு வெளியே அமைக்கப்பட்டுள்ள மரத்தட்டுகளாலான அலமாரியில் வைத்து விட்டு, ஆராதனை முடிந்த பின்பு அக்காலணிகளை மீண்டும் பெற்றுக்கொள்வார்கள். நாங்கள் இருவரும் அவைகளை பாதுகாத்து அவர்களிடம் திரும்ப ஒப்படைக்கும் பொறுப்பினைப் பெற்றிருந்தோம்.

தற்போது போதகர் எஸ். ஆனந்த் அவர்கள் சிறந்த ஆவிக்குரிய தலைவராகவும், சென்னையில் அமைந்துள்ள அப்போஸ்தல கிறிஸ்தவ அமைப்பின் கலைஞர் கருணாநிதி நகர் ஊழியத்தில் மூத்த போதகராகவும் உள்ளார். பிற்காலங்களில் அவர்கள் யாவரும் என்னுடைய சபைகளிலும், நெகேமியா வேதாகமக் கல்லூரியிலும் சுவிசேஷ ஊழியர்களாகவும், விரிவுரையாளர்களாகவும், தன்னார்வ



போதகர் *S.* ஆனந்த்





ஊழியர்களாகவும் எனக்கு உதவி செய்தார்கள். நான் அப்போது ஓர் சிறிய சபையில் போதகராக வும், ஓர் வேதாகமக் கல்லூரிக்குப் பொறுப்பாளராகவும் தேவனால் உயர்த்தப் பட்டேன் என்பது குறிப்பிடத்தக்கது.

நான் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல பன்மொழியிலான கிறிஸ்தவ மாதாந்திர பத்திரிகையான **அழைப்பின் எதிரொலி** சபையை நடத்த ஆண்டவர் உதவி செய்தார். நான் கர்த்தருடைய ஊழியத்தில் பிரதிஷ்டை செய்த உடனே கர்த்தர் உள்ளூரில் உள்ள சபைகளுக்கு உதவி செய்யவும், கிறிஸ்தவரல்லாத, யாரும் அணுகமுடியாத பகுதியாக இருந்த சேப்பாக்கத்தில் ஒரு சபையை ஆரம்பிக்கவும் கிருபை செய்தார். தற்சமயம் அந்த சபை நமது தலைமை சபையாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

நான் கடினமாக உழைத்தும், பாரமாக ஜெபித்தும் புதிய ஆத்துமாக்கள் எங்கள் சபைக்கு கிடைக்கவில்லை. முக்கியமாக மற்ற சபைகளுக்குரிய உறுப்பினர்களை என் சபைக்கு கவர்ந்திழுக்கக் கூடாது என்பதில் நான் மிகவும் உறுதியாக இருந்தேன். நான் எப்பொழுதுமே 'Sheep Stealing' (மற்ற சபை உறுப்பினர்களை திருடுவது) கொள்கைக்கு எதிராக இருந்து வந்தேன். ஆகவே புதுச்சபையை ஆரம்பித்த முதல் ஐந்தாண்டுகளில் என் சபை உறுப்பினர்களாக எனது மனைவியும், மகளும் மட்டுமே இருந்தார்கள். நான் வழக்கமாக ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை காலையிலும், மாலையிலும் அவர்களுக்கு அளிக்கும் செய்தியை அவர்கள் கவனமாக கேட்பார்கள். அந்த சபையானது அக்பர் சாகிப் தெரு, பெரிய தெரு, மற்றும் சி.என். கிருஷ்ணசாமி தெரு ஆகியவற்றில் அமைந்தது. அது மட்டுமல்லாமல் நாங்கள் தெரு பிரச்சாரத்தின் மூலம் தெருவிலுள்ள ஏழை மக்கள் மற்றும் மருத்துவமனைகளில் உள்ள சுகவீனமானவர்களை சந்தித்து அவர்களுக்காக ஜெபித்தோம். என் சுய வருமானத்தையும் கர்த்தரின் ஊழியத்திற்கே கொடுத்ததால் பல நாட்கள் குடும்பத்தோடு பசியோடும், பட்டினியோடும் இருக்க நேர்ந்தது.







என்னுடைய அக்கார்டியன் என்ற இசைக்கருவியை வாசிக்கும் பழக்கம், வீட்டின் உரிமையாளர்களுக்கு பிடிக்கவில்லை. அதற்கு அவர்கள் கூறிய காரணம் யாதெனில், நீங்கள் இவ்வாத்தியத்தோடு கர்த்தரைத் துதிக்கும்போது எங்களுடைய தெய்வங்களால் செயல்படமுடிவதில்லை என்பதாகும். அதனால் அவர்கள் என்னுடைய வீட்டையும், சபையையும் மாற்ற என்னைக் கட்டாயப்படுத்தினர். ஆகவே, நானும் கிறிஸ்தவரல்லாத அதே பகுதியில் பல்வேறு தெருக்களில் எங்களுடைய குடியிருப்பை மாற்ற வேண்டியதாயிருந்தது.

***

... 7-ம் பக்கத் தொடர்ச்சி

'மன்னிக்காத குணம்,' நம்மை நடத்திச் சென்றுவிடும். மகிழ்ச்சியான கிறிஸ்தவ வாழ்க்கையின் இரகசியம், மன்னித்து மறப்பதுதான்.

## நான்காவது படி என்ன ?

விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிக்கிறவருமாகிய இயேசு கிறிஸ்துவின் மேலேயே நம் கண்களைப் பதிய வைத்து நமது வாழ்க்கைப் பயணத்தைத் தொடருவதுதான் நான்காவது படி ஆகும். **"ஆகையால், மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்கிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்"** எபிரேயர் 12:1, என்று எபிரேயரில் வாசிக்கிறோம். இதில் "பாரமான யாவற்றையும்" என்று எழுதப்பட்டுள்ளது. இயேசுவையே நோக்கிக் கொண்டிருப்போமானால், நமது ஓட்டத்தை இலகுவாக முடித்து விடுவோம். ஓட்டப்பந்தயத்தில் ஓடுகிறவர்கள், மெல்லிய ஆடையை அணிந்திருப்பார்கள். கோட்டும், சூட்டும் அணிந்து யாரும் ஓட்ட பந்தயத்தில் ஓட மாட்டார்கள். அத்தகைய ஆடை அவர்களது வேகத்தைக் குறைத்து முடிவுக் கோட்டைச் சென்றடைய வைக்காது. ஆகவேதான், எபிரேய புத்தகத்தை எழுதியவர் "பாரமாகிய பாவத்தை" ஒதுக்கிவிடச் சொல்கிறார் – கசப்பு, மூர்க்கம், கோபம், சண்டைகள், தூஷணம், தீமையான எண்ணங்கள் ஆகியவற்றை ஒதுக்கிவிட்டு, தயவு, மனதுருக்கம், மன்னிக்கும் மனப்பான்மை ஆகியவற்றை மாத்திரம் சுமந்து நம் வாழ்க்கைப் பயணத்தில் ஓட வேண்டும்.

மேலும், பழைய ஏற்பாட்டு பக்தர்கள் மட்டுமல்லாமல், இக்காலத்து பக்தர்களும் நமக்கு முன்மாதிரியாக இருக்கின்றனர்: சாது சுந்தர் சிங், சீசன்பால்க், பண்டித ரமாபாய், வில்லியம் கேரி, பிஷப் வி.எஸ். அசரியா, கிரகாம் ஸ்டெய்ன்ஸ் ஆகியோர் தங்களது ஓட்டத்தை நன்கு ஓடி, நமது நாட்டில் ஊழியம் செய்து, இந்தியர்களாகிய நமக்காக மரித்தார்கள்.

2023 என்ற புதிய வருட தீர்மானங்களைக் குறித்து ஆரம்பித்தோம். நம் ஓட்டத்தைத் தடுத்து நிறுத்தும் பாரங்களைக் களைந்த நமது கிறிஸ்தவ ஓட்டத்தை வெற்றியுடன் ஓடி முடிப்போம். இறுதியில், பவுலுடன் இணைந்து தைரியமாக, 'ஓட்டத்தை ஓடி முடித்தேன்' என்று கூறுவோமாக. **"இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள**


# தேவை

**ஊழியம் செய்யத் தரிசனமும், பிரதிஷ்டையும் உள்ளவர்கள் தேவை:**

- அலுவலகப் பணியாளர்கள் (கம்ப்யூட்டர் அனுபவத்துடன்)
- அலுவலக மற்றும் அச்சக உதவியாளர்கள்
- மெட்ரிக்குலேஷன் பள்ளி தலைமை ஆசிரியர்
- மெட்ரிக்குலேஷன் பள்ளி ஆசிரியர்கள்
- உதவிப் போதகர்கள்
- சுவிசேஷகர்கள்
- வேதாகமக் கல்லூரி முதல்வர் (நிர்வாகம்)
- செக்யூரிட்டி பணியாளர்கள்
- டிரைவர்கள்

தொடர்புக்கு : அழைப்பின் எதிரொலி
செல் : 98410 71858

RNI NO. 67380/93. Postal Regn. No. TN/CH/(C)/197/21-23 WPP NO. TN/PMG(CCR)/WPP-158/21-23

**நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்**" 2 தீமோத்தேயு 4:7,8

புதுவருட தீர்மானங்களைப் பற்றி சிந்தியுங்கள். ஜெபித்து, அவற்றை வாழ்க்கையில் பயன்படுத்தி, சுமைகளைக் குறைத்து, முன்னேறிச் செல்லுங்கள். உங்கள் அனைவருக்கும் எங்களது புத்தாண்டு 2023 வாழ்த்துக்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

************

## OUR BANK DETAILS:

### *1. Bank : State Bank of India*

| | | |
|---|---|---|
| Branch | : | **Triplicane, Chennai-5** |
| Name | : | **S. Sam Selva Raj** |
| A/C No. | : | **1023 2934 679** |
| IFSC | : | **SBIN 00 00 249** |
| SWIFT CODE | : | **SBI NIN BB 455** |

### *2. Bank : ICICI Bank*

| | | |
|---|---|---|
| Branch | : | **Anna Salai, Chennai-6** |
| Name | : | **Echo of His Call** |
| A/C No. | : | **6038 0502 2319** |
| IFSC | : | **ICIC 000 6038** |

### *3. Bank : State Bank of India*

**(This Account is for Tax Exemption for Indians only )**

| | | |
|---|---|---|
| Branch | : | **Triplicane, Chennai-5** |
| Name | : | **Echo of His Call Educational Trust** |
| A/C No. | : | **1023 2923 805** |
| IFSC | : | **SBIN 00 00 249** |

**Google Pay: 98410 71858**
**PayPal : SAM SELVA RAJ**
*****
E.mail : sam@echoofhiscall.org

# அழைப்பின் எதிரொலி ஊழியங்கள்

**மாதப் பத்திரிகை 16 மொழிகளில், வேதாகமக் கல்லூரிகள், தபால் வழிக் கல்விகள், சபைகளை ஸ்தாபித்தல், கிராம ஆங்கில உயர்நிலைப் பள்ளி, சுவிசேஷ அச்சகம், சுவிசேஷம், கருத்தாய்வுகள், சமூக சேவைகள் மற்றும் ஏனைய செயல்பாடுகள்**

**வருட சந்தா ரூ. 100/–** **ஆயுள் சந்தா ரூ. 2000/–**

☞ **அழைப்பின் எதிரொலி** ஊழியத்தின் பல்வேறு ஊழியங்கள், நமது பங்காளர்களால் அளிக்கப்படும் சுயவிருப்பக் காணிக்கை மற்றும் நன்கொடைகளினால் நடைபெற்று வருகின்றன. தேவன் உங்கள் உள்ளத்தில் அளித்த விருப்பத்தின்படி நமது ஊழியங்களைத் தாங்கும்படி கேட்டுக்கொள்கிறோம். சுவிசேஷம் சென்றடையாத இடங்களில் சுவிசேஷத்தினை கொண்டு சேர்த்திட மற்றும் சபைகள் ஸ்தாபிக்கப்பட உங்கள் உதவி எங்களுக்கு தேவை.

☞ உங்கள் விலாசம் அல்லது மின்னஞ்சல் மாறினால், உங்கள் பழைய விலாசத்தையும் புதிய விலாசத்தையும், புதிய மின்னஞ்சலையும், உங்கள் பதிவு எண்ணையும் உடனே எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை உங்களுக்குத் தவறாமல் கிடைக்க வேண்டுமானால் எங்களுக்குக் கடிதம் எழுதுங்கள்.

☞ நம் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகள் 16 மொழிகளிலும் நமது இணையதளங்களில் (Websites) வெளியாகின்றன. அவற்றிலிருந்து படித்தும், பதிவிறக்கம் செய்தும் பயன்பெறுங்கள்.

☞ உங்கள் கடிதங்கள், ஜெப விண்ணப்பங்கள், காணிக்கைகள் முதலியவற்றை காசோலை (Cheque), மணிஆர்டர் (M.O.) அல்லது டிமாண்ட் டிராப்ட் (D.D.) **NEFT, PayPal (Sam Selva Raj, sam@echoofhiscall.org) PhonePe (98410 71858), Gpay (98410 71858), Western Union, MoneyGram, etc.** மூலம் **Echo of His Call** என்ற பெயரில் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்புங்கள். Online மூலமாகவும் அனுப்பலாம்.

☞ உங்கள் E.mail முகவரி மற்றும் செல்போன் / தொலைபேசி எண்களை எங்களுக்கு அனுப்புங்கள். தேவைப்படும்போது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையை E.mail மூலம் அனுப்ப உதவியாக இருக்கும்.

**சகோதர, சகோதரிகளே எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.** 1 தெசலோனிக்கேயர் 5:25.

## அழைப்பின் எதிரொலி,

**10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.**

தொலைபேசி : (+91 – 44) 2852 8282, 2852 9293, 2854 7766 செல்: (+91) 98410 71852, 95661 31858
**E.mails : sam@echoofhiscall.org / biblecor@yahoo.co.in**
**Websites : www.echoofhiscall.org / www.stpaulsmatriculation.com**

## YOU CAN SEND YOUR DONATION ONLINE ALSO

**Regd. with the RNI under No. 67380/93**
**Licenced to post without pre-payment**
**Postal Regn. No. TN/CH/(C)/197/21-23**
**Licence No. WPP - TN/PMG(CCR)/WPP-158/2021-23**
**Date of Publication: last week of previous month**
**Date of Posting : 27th & 28th of previous month**
**Posted at "Egmore RMS / 1 Patrika Channel"**
**on 28th DECEMBER 2022**
**If un-delivered please return to:**
**ECHO OF HIS CALL (TAMIL)**
**P.O. Box No. 2957, Chepauk, Chennai - 600 005, INDIA.**
**Phone: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766**

*JESUS LOVES YOU!*

**To**

*GOD BLESS YOU!*

Owned and published by **S. Sam Selva Raj** from New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005 and printed by **S. Sam Selva Raj** at **Echo of His Call Printers**, New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005. Editor: **S. Sam Selva Raj.**